

திருவாசகம் - 12

# திருச்சாழல் கதைவடிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

திருச்சாழல் என்பது பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டு. ஒரு பெண் தத்துவங்களைப் பற்றிக் கேட்க, வேறு பெண்கள் விடைகூறுவதாக இவ் விளையாட்டு இருக்கும். பெண்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து வேடிக்கையாகப் பேசி மகிழ்ந்து விளையாடும் விளையாட்டை மாணிக்கவாசகர் திருச்சாழல் எனப் பெயரிட்டு இறைவனின் நாமத்தைச் சொல்லி அவரின் பெருமையை ஊரறியக் கூறுகிறார். இது இலக்கியத்தில் அந்நாளில் இருந்த ஒரு முறையாகும். இது இசையுடன் கலந்த பாடல்களைப் பாடி ஆடுவதாகும். ஒரு குழு பாடலால் கேள்வி கேட்க மறுகுழு பாடலால் பதில்கூற வேண்டும். அன்றைய நாளில் பெண்களின் அறிவு உயர்நிலையில் இருந்தது. நூலாசிரியர்களின் அறிவும் உயர்மட்டத்தில் இருந்தது. அதனால்தான் சிறந்த நூல்கள் உருவாகின. அப்படியான நூல்கள் இனித் தோன்றாது. அதனால்தான் அவற்றை இன்றைய தேவை கருதி கதைகளாக்குகிறேன். இது ஒரு புனிதமான பணி. இறைவன் ஆணையிட்டுள்ளான். எல்லாம் சிவன் செயல் திருவாசகம் மக்களுக்காக எழுதப்பட்டது. இதை உணர்ந்தால் சரி.

நன்றி.

**கே.வி.குணசேகரன்**

உ

சிவமயம்

# திருச்சாழல்

## சிவனின் காருண்யம்

## தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

சாழல் என்பது மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டு. தடையும், தடைக்கேற்ற விடையும் பாடுவது இவ்விளையாட்டின் தன்மை.

**பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டடென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 01**

அது ஒரு கிராமம். கன்னிப் பெண்கள் பலர் வாழ்கின்றனர். அவர்கள் குழுக்களாகப் பிரிந்து பல்வேறு விளையாட்டுக்களை விளையாடுவர். காளமேகப் புலவர் கேலியாகவும், கிண்டலாகவும் பாடல்களைப் பாடிச் சிவனைப் புகழ்ந்ததுபோல அருளினியும் மிகவும் வேடிக்கையாகச் சைவத்தத்துவங்களை எடுத்துச் சொல்வாள். அவளோடு சேர்ந்து கார்த்திகா வாதிடுவாள். அது பெண்களுக்குக் கொண்டாட்டம். அடுத்தவாரம் சிவன்கோவில் கொடியேற இருப்பதால் கன்னிப்பெண்கள் கூட்டம் கோவிலைத் துப்பரவு செய்து கொண்டிருந்தது. கதிரேசனும் மகாலிங்கமும் நல்லைநாதனும் அவர்களுடன் சேர்ந்து கோவிலைச் சுத்தமாக்கிக் கொண்டிருந்தனர்.

கார்த்திகா முழுகி நீறணிந்து சந்தனத் திலகமிட்டுக் கூந்தலில் பூச்சூடி வந்தாள். அதைக்கண்ட அருளினி சொன்னாள்; “சிவனம்மை வாறா. அவவுக்குச் சிவனைப் பற்றிச் சொன்னால் வேறு அர்த்தம் சொல்வா. வரும் கோலத்திற்கு ஒரு பாம்பைப் பிடித்துக் கழுத்தில் போட்டுவிட்டால் சிவன்தான். அதேனடி சிவன் பூசுவது வெண்ணீறு, அணிவது சீறும் பாம்மை, பேசுவது வேதம். இதெல்லாம் தெய்வத்திற்குப் பொருந்துமா…?” என்றாள் அருளினி.

கார்த்திகா கதைக்க விரும்பவில்லை. அதைக்கண்ட கதிரேசன் சொன்னார்; “அருளினி சிவனைக் கேலி செய்கிறாள். அதை நீ கேட்டுவிட்டுச் சும்மா இருக்கிறாய். தகுந்த பதிலைக் கொடுக்க வேண்டாமா….?” என்று விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

“ஐயா, அருளினி பெரும் சிவபக்தை. அவளுக்குத் தெரியாதது எதுவும் இல்லை. இப்போ என்னைச் சோதிக்கிறாள்” என்றாள் கார்த்திகா.

“பரவாயில்லையம்மா. எனக்கும் தெரியாது சொல் கேட்போம்” என்று கதிரேசன் சொல்ல நல்லைநாதனும், மகாலிங்கமும் வேறு பலரும் அங்கு வந்து கூடினர்.

“ஐயா, மனம் ஒன்றை விரும்பி அதுதான் உன்னதமான பொருள் என்ற நினைத்துவிட்டால், அது மிகவும் தீதென்றாலும் அதை விடாது. நாம் எல்லோரும் சைவர்கள். எப்பொருள்களை எரித்தாலும் அது சாம்பராகும். சாம்பல் எரியாது எரிக்க எரிக்க அது மாறாதிருக்கும். அதனால்தான் மெய்மையை விளக்கச் சிவன் சாம்பலை அணிகிறான். அழியும் பொருளில் இருந்து எஞ்சும் சாம்பல் அழியாப் பொருள். சிவனது படைப்பில் இனியவையும் உண்டு. இன்னாதவையும் உண்டு. உயிர்களின் முன்னேற்றத்திற்கு இன்னாதவை எதிர்மறையாகத் தூண்டலிடுகின்றன. சிவன் சர்ப்பத்தை அணிந்திருப்பதன் உட்கருத்து இதுவேயாகும். உலகின் சொரூபம் வேதம். அதனால்தான் சிவன் வேதத்தை ஓதுகிறார். இவையெல்லாம் கற்பனையென்பாரும் உளர். ஒருபெண் ஒருவனை விரும்புகிறாள். அவன் குடிப்பதில்லை ஒழுக்கமானவன் என்று நினைக்கிறாள். உற்றார், உறவினர், பெற்றோர் எல்லோரும் அவன் குடிகாரன், ஒழுக்கமில்லாதவன் என்கின்றனர். அதைச் சொன்னால் அவள் நான் விரும்புவது அவர்களையல்ல. அவர் ஒழுக்கமானவர் என்கிறாள். அதுபோலத்தான் இதுவும். சிவன் எப்படியானவராக இருந்தாலும் எமது மூதாதையர் அவரை விரும்பி ஏற்றுவிட்டனர். இது உலகம் படைக்கப்பட்ட நாளில் இருந்து நடைமுறையில் உள்ளது” என்று அருளினியைப் பார்த்துக் கண்சிமிட்டினாள் கார்த்திகா. சில பெண்கள் குபீரென்று பலமாகச் சிரித்தனர். “நல்ல விகடமான கதை” என்று சிரித்தார் கதிரேசன்.

**என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்**

**துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ?**

**மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்**

**தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 02**

அருளினி முறைத்தாள். கார்த்திகா சிரித்துவிட்டு, “இன்னும் கேள்” என்றாள்.

“அவள் கேட்க மாட்டாள். நான் கேட்கிறேன்” என்று ஈஸ்வரி கேட்டாள்; “அனைத்திற்கும் ஈசன் என்று சிவனாரைச் சொல்கிறாய். அத்தகைய சிவனுக்கு நைந்த கந்தைத்துணியைத் தவிர வேறு நல்லதுணி கோவணங்கட்டக் கிடைக்கவில்லையா? அவனுக்குப் பொருள் செறிந்ததும் அறியாததுமாகிய வேதமே அரைஞாண் ஆகவும் கோவணமாகவும் அமைந்திருக்கிறது இது ஏன்…?” என்று கேட்டாள்.

“மகளே, உடலை அலங்கரிப்பதில் கவனம் செலுத்தாதே. நல்லறிவைக் கொண்டு உள்ளத்தை அலங்கரி என்ற மேலான கோட்பாடு அந்தக் கந்தல் கோவணத்தின் வாயிலாக விளங்கப்படுத்தப்படுகிறது. இன்று எத்தனையோ பேர் சிவத்தொண்டுக்காக வந்திருக்கிறோம். சிவத்தொண்டு என்பது கூட்டுதல், குப்பையை அகற்றுதல், அதை எரித்தல், கழுவுதல், எண்ணெயைத் துடைத்தல் போன்றன. இதற்குப் பட்டுப்பாவாடை தாவணி தேவையா…? அவற்றை அணிந்து வந்தவர்கள் சிவசேவையா செய்கிறார்கள்? அவர்கள் எதை நினைத்து வந்தார்களோ அதைச் செய்வதில் கவனமாக இருக்கிறார்கள். அருளினியைப் பார் இடைக்கிடை சிரிக்கிறாள். வெட்கப்படுகிறாள். முணுமுணுக்கிறாள். தனது தோழியோடு தனியிடத்தில் விளக்குமாற்றுடன் நிற்கிறாள். ஆனால் கூட்டவில்லை” என்றதும் பெண்கள் பெரிதாகச் சிரித்தனர். “கார்த்திகா சொல்வது சரி. சிலர் வீட்டுவேலை செய்யக் கள்ளப்பட்டும், வீட்டாரின் தொந்தரவுக்காகவும் தான் வருவார்கள்” என்று நல்லைநாதன் கூற, மகாலிங்கம் சொன்னார்; “உனக்குக் கார்த்திகா சொன்னதன் அர்த்தம் விளங்கவில்லை” பலர் சிரித்தனர். சிலர் மற்றவர்களுக்குச் சொல்லிச் சிரித்தனர். “சிரிக்காதீர்கள். உடைகள் மூலம் உடலை அலங்கரிப்பதைவிட்டு உள்ளத்தை நற்செயல்களாலும், நல்ல வார்த்தைகளாலும் அலங்கரியுங்கள். அதுதான் சிவனாரின் கோவணத் தத்துவம்” என்றாள் கார்த்திகா.

**கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**

**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ**

**தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்**

**காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 03**

“சுவாமிஜி, சிவன் குடியிருப்பது சுடுகாட்டில். அவன் அணிவது புலித்தோல். அவனுக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை. உறவினரும் இல்லாத ஒற்றையாள். அதனால் சிவனைத் தெய்வமென்று கொள்ளலாமா” ஈஸ்வரி கேட்டாள்.

“கார்த்திகாவுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. அதைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு; “தாயே, நல்ல கேள்வி கேட்டாய். உலகம் அழியும் தன்மை உள்ளது. எல்லா உடல்களினதும் வாழ்நாள்க் குடியிருப்பு சுடுகாடு. அங்கு சென்று குடியேறினால் மீண்டு எங்கும் செல்ல முடியாது. அதனால் அதை நிரந்தர வதிவிடம் என்று என்போன்ற ஞானிகள் சொல்வர். ஆணவத்துடன் சிவனை அழிக்கப் புலியுருவுடன் வந்த அரக்கன். அவனைக் கொன்று ஆடையாக்கியமையால் சிவனால்தான் ஆணவத்தை அழிக்க முடியும் என்ற தத்துவம் கூறப்பட்டுள்ளது. தானே உருவானவன் அவன். அதனால் அவனுக்கு யாரும் இல்லை. அதனால் பற்றுக்களும் இல்லை. அவனுக்குத் துணையும் தேவையில்லை. தானே இயங்கும் வல்லமை கொண்டவன் சிவன். நிலையில்லாத உடலைப் பெற்ற மனிதன் எதையும் சொந்தம் பாராட்டக்கூடாது என்ற தத்துவம் இதன்மூலம் விளக்கப்படுகிறது. உடல் நிலையானது என்று நினைத்துத்தான் உடலை அலங்கரிக்கிறார்கள். அதனால்தான் தமக்குரிமையில்லாத பொருட்கள்மீது உரிமை பாராட்டுகிறார்கள். அதனால் நிம்மதியை இழந்து பரிதவிக்கிறார்கள். இந்தக் கோவிலை எடுத்தால் இதற்குச் சொந்தமான காணிக்குப் பலர் சொந்தம் கொண்டாடி நீதிமன்று சென்று பணத்தையும், பொருளையும் தொலைத்துவிட்டு நிம்மதி இல்லாமல் அலைகின்றனர். இதைத்தான் இத்தத்துவம் விளக்குகிறது” என்றாள் கார்த்திகா.

“இதெல்லாவற்றையும் நீ எங்கே அம்மா கற்றாய்” என்றார் கதிரேசன்.

“சிவனது உருவைப் பாருங்கள் யாவும் விளங்கும்” என்றாள் கார்த்திகா.

**அயனை அனங்கனை அந்தகளைச் சந்திரனை**

**வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ**

**நயனங்கள் மூன்றுடை நாயகனே தண்டித்தால்**

**சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 04**

“சுவாமியம்மா, நீங்கள் எல்லாம் கற்றவர். சிவனைப் போற்றுபவர், புகழ்பவர், ஆராதிப்பவர். அவரின் பக்கம்தான் நியாயம் இருப்பதாகச் சொல்வீர்கள். எனினும்

கேட்கிறேன். பிரமதேவனையும், மன்மதனையும், யமனையும், சந்திரனையும் சிவன் தழும்புகள் ஏற்படும்படி தண்டித்தவன். சிவனால் ஏற்படுத்தப்பட்ட அத்தழும்புகள் என்றைக்கும் மறைந்து போகாது பழிச்சொற்களை ஏற்படுத்தியுள்ளன. சிவன் இப்படித் தண்டித்தது நியாயமா…?

“சிவன் முக்கண்ணன். அவனது மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண் ஞானக்கண்ணாகும். தேவர்கள் எப்பொழுதும் ஆணவமுடையவர்கள். அவர்கள் தம்மைத்தவிர உயர்ந்தவர்கள் யாரும் இல்லை என்ற எண்ணங்கொண்டவர்கள். தேவர்களானாலும் குற்றஞ்செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்ற நியாயம் வலியுறுத்தப்படுகிறது. மனிதர்களுக்கு, செய்யும் பாவங்களுக்கேற்பத் தண்டனைகள் கிடைக்கின்றன. அத்துடன் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் பக்கம்சார்ந்து நடப்பதனால்தான் உலகின் சமநிலை தளம்புகிறது. அண்மையில் எமது பாடசாலை அதிபர் நியமனத்தில் கல்விப்பணிப்பாளர் பக்கம் சார்ந்ததாகச் சொல்லப்பட்டது. அது உண்மை. கோவிற் காணிக்கு ஒருவர் இன்னொருவரைப் பணம் கொடுத்துச் சாட்சியாக மாற்றியது உனக்குத் தெரியும். எந்த ஒரு வகையிலும் நீதி தவறக்கூடாது என்பதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டனர். மனிதனுக்கு உடனுக்குடன் தண்டனைகள் இறைவனால் வழங்கப்படுகின்றன. அது மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியும். அவர்கள் சில சமயம் இயலாமையால் அதைக்கூறி விடுகின்றனர்” என்றாள் கார்த்திகா.

**தக்கனையும் எச்சையும் தலையறுத்துத் தேவர்கணம்**

**தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ?**

**தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தங்கு**

**எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன் காண் சாழலோ. 05**

“சரி நீ இதுவரை சொன்னவற்றை ஏற்றோம். இப்போ இதற்கு என்ன சொல்லப் போகிறாய்….? மாமனான தக்கனின் யாகத்தை அழித்து, அவனது தலையை வெட்டி ஆட்டுத்தலையைப் பொருத்தியதோடு தேவர்கள் பலரைத் தண்டித்தது என்ன நியாயம்? தேவர்கள் தக்கன் சிவனது மாமன் என்ற நினைத்துச் சென்றிருப்பர்” என்றாள் அருளினி.

“எம்மைச் சுற்றியிருப்போரைப் பார். பூமியில் திரும்பத் திரும்ப நிகழ்கின்ற அடிப்படைக் கோட்பாடு இந்த யாகத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தந்தையாக இருந்தாலென்ன, பிள்ளையாக இருந்தாலென்ன, மனைவியாக இருந்தாலென்ன, நெருங்கிய உறவினர்களாக இருந்தாலென்ன. அவர்கள் தம்மைவிடப் பெரியவர்கள் யாருமில்லை என்ற நினைப்பில் இறைவனையும், நீதி நியாயங்களையும் புறக்கணித்துவிட்டுத் தமக்கு வேண்டியவர்களுக்கு உதவுவதில் முன்நிற்கின்றனர். பாடசாலைகளில் அதிபர் பதவியை எடுத்துப் பார்த்தால் தமக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டதால் கல்வி அழிந்து விட்டது. தக்கன் சிவபெருமான் தனது மகளின் கணவன் என்று நினைத்தானே தவிர உலகின் முதல்வன் என்று நினைக்கவில்லை. சந்தர்ப்பவசத்தால் பதவிகளும், உறவுகளும் வந்து சேர்ந்தால் அதைத் தர்மப்படி செயற்பட்டு பதவியையும், உறவுகளையும் செயற்படுத்தல் வேண்டும். ஒரு சேவகன் தலைமைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தக்கனுக்கு நடைபெற்றதுதான் மக்களுக்கும் நடைபெறும் என்பதை இச்சம்பவம் உறுதிப்படுத்துகிறது. வீரபத்திரரால் வெட்டப்பட்ட தக்கனது தலையைக் காணாமையால்தான் ஆட்டின் தலை பொருத்தப்பட்டது. அது சிவனது கருணையாகும். இல்லாவிட்டால் தக்கன் இறந்திருப்பான்” என்றாள் கார்த்திகா.

**அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்**

**நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ?**

**நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்**

**சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 06**

உன்னுடன் யாரும் கதைத்து வெல்ல முடியாது. சோதிப்பிழம்பாய்த் தென்பட்ட சிவனின் அடிமுடியைத் தேடித் திருமாலும் நான்முகனும் முயன்று தோல்வியடைந்தனர். இது எதனால் என்று கூறு” என்றாள் அருளினி.

“ஒருவர் இன்னொருவரைவிடப் பெரியவர் என்று நினைப்பது ஆணவத்தின் தன்மையைக் காட்டுகிறது. ஒரு நிறுவனத்தில் பல வேலைகள் இருக்கும். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டிருப்பர். அவரவர் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட வேலையைத் திருப்திகரமாகச் செய்வது தான் தர்மம். ஒருவருக்கு விதிவசத்தால் மேலான வேலை கிடைக்கும். இன்னொருவருக்கு அதே விதிவசத்தால் கூலிவேலை கிடைக்கும். இருவரும் தத்தமது வேலைகளைச் சிறப்புடன் செய்ய வேண்டும்.

தொழிலில் வேறுபாடு இருந்தாலும் செய்யும் முறையில் வேறுபாடு இருக்கக்கூடாது. கௌசிக முனிவர் தவத்தில் பெரியவர். அவரின் குரு ஒரு கசாப்புக்கடைக்காரன். பெரியவர் சிறியவர் என்பது அவரவர் செய்யும் பதவியால் வருவதல்ல. பண்பால் வருதல் வேண்டும். அத்துடன் வேறு எண்ணங்களோடு செய்யும் தொழில் நிறைவடையாது. அடியையும் முடியையும் அடியவர்கள் அன்புசெலுத்தி அறிந்து கொள்வர். இதையறியாததால் தான் அடியையும் முடியையும் தேடிய தேவர்களால் அதை அடைய முடியவில்லை" பக்கத்து ஊரில் உள்ள சிவன்கோவில் கடந்த மூன்று வருடங்களாக மூடப்பட்டமைக்கு காரணம் யார் பெரியவர் என்ற பிரச்சினைதானே. பூசகர் தான் பெரியவர் என்கிறார். தலைவர் தான் பெரியவர் என்கிறார் அதனால் ஊர்மக்கள் துன்பப்படுகின்றனர். ஒவ்வொருவரும் தாம் செய்வது சேவை என்று கருதினால் இத்தகைய துர்ச்சம்பவங்கள் நடைபெறாது" என்றாள் கார்த்திகா.

**மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி**

**சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ?**

**சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்**

**பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 07**

கார்த்திகா சொன்னாள்; "சிவமும் சக்தியும் ஒன்று. அந்த ஒரு சக்தி பல சக்திகளாக விரிவடைந்துள்ளது. அத்தகைய சக்திகளில் ஒன்று கங்கைநதி. இமயமலை என்பது சிவனின் சடாமுடியாகும். அங்கிருந்து பாயும் கங்கையானது பூமியின் தேவைக்கேற்ப பாய்ந்து வந்து நிலவுலகில் வாழும் மக்களுக்குப் பயனளிக்கிறது. அப்படியல்லாமல் தடையின்றி நீர் முழுவதுதம் பாய்ந்து வந்தால் நிலவுலகம் அழித்துவிடும். இத்தகைய தடையை வைப்பது சிவனின் அருளாகும். இதை உணர்பவர்கள்தான் மெய்யுணர்வுடையவர்களாவர். இதை உணராதவர்களால்தான் பிரச்சினைகள் உருவாகின்றன. அதிகாரத்தை வரையறைக்குள் வைத்திருத்தல் வேண்டும். ஆணவத்தால் அவற்றைக் கூட்டிக் குறைத்தால் கங்கை பெருக்கெடுத்தது போலாகிவிடும்" என்றாள் கார்த்திகா.

**கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த**

**ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ?**

**ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட**

**மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 08**

“சரி ஒத்துக் கொள்கிறேன். எப்போதும் சக்தி சிவனாக இருப்பவன் ஏன் மாதொருபாகனாக இருக்கிறான்” என்று கேட்டாள் ஈஸ்வரி.

“சிவமும் சக்தியும் ஒன்றாக இருக்காதுவிட்டால் உலகில் உயிர்கள் தோற்றம் பெறா. உலகம் என்பது ஆணும் பெண்ணும் சேர்ந்தது. ஆணில்லாவிட்டால் பெண் இல்லை. பெண்ணில்லாவிட்டால் ஆண் இல்லை. ஓர் உடல் ஆணாலும் பெண்ணாலும் ஆக்கப்பட்டது. அதைத்தனியொருவரால் ஆக்கமுடியாது. இது உலகநியதி. இதை வெளிப்படுத்துவதுதான் மாதொருபாகன் என்ற நிலை. ஓர் பெண்ணின் வலப்பாகம் ஆண்தன்மை கொண்டது. ஓர் ஆணின் இடப்பாகம் பெண்தன்மை கொண்டது. இதை உணரும் பக்குவம் உனக்கில்லை. ஏனென்றால் நீ கன்னிப்பெண்” என்றாள் கார்த்திகா.

**தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்**

**பெண்பா னுகந்தான் பெரும்பித்தன் காணேடீ**

**பெண்பா னுகந்திலனேற் பேதாய் இரு நிலத்தோர்**

**விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 09**

“கார்த்திகா, சிவன் எப்போதும் சுத்தசிவமாக இருப்பதாகச் சொல்கிறாய். அவன் ஏன் மாதொருபாகனாக இருப்பது சுத்தமா...?” என்று கேட்டாள் அருளினி.

பெண் புனிதமானவள். அவள் உலக மாதா. பெண்ணில்லாத உலகம் ஒருபோதும் பூரணமாகாது. திருமூலர் சிவனடியார்க்குத் தீட்டுத் தொடக்கு இல்லை என்கிறார். சிவம் சக்தியோடு சேராவிட்டால் உலகில் எந்த ஒரு உயிரும் தோன்றமாட்டாது. மரம், செடி, கொடி எதுவாக இருந்தாலும் ஆண் பெண் கலப்பில்லாவிட்டால் விதை தோன்ற மாட்டாது. விதையில்லாவிட்டால் உணவில்லை. உற்பத்தியும் இல்லை. அத்துடன் மரங்களும் இல்லை. உயிர்களுக்குக் காமத்தை உண்டுபண்ணவே சிவன் மாதொருபாகனாக இருக்கிறான். சிவசக்தி ஒருபோதும் தனித்தனியாக இருந்ததில்லை. தனித்தனியாக இருந்தால் அந்தத் தனித்தனியும் இருக்கமாட்டாது. மாதொருபாகநிலை உலகைச் சமப்படுத்துகிறது. நிம்மதியைக் கொடுக்கிறது. மகிழ்வைக் கொடுக்கிறது. வாழ்க்கையின் அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஆணின் உயிரைப் போன்றவள் பெண். பெண்ணின் உயிரைப் போன்றவன் ஆண். இந்த இரு உயிர்களும் இல்லாவிட்டால் மிஞ்சுவது சடம். ஆண் பெண் உறவுதான்

உலகிலுள்ள அனைத்துச் செல்வங்களையும் கொடுத்து மகிழ்வைப் பிறப்பிக்கிறது. இருளை நீக்குகிறது. உனது தாயார் தனது சகோதரன் ஒருவன் வெளிநாட்டில் இறந்தமையால் அங்கு சென்றுவர இருமாத காலம் சென்றது. உனது தந்தை உணவுக்காகப் பெருஞ்சிரமப்பட்டார். பலரிடம் கடமைப்பட வேண்டியிருந்தது. தோட்டம் பாழானது, வீடு நரகமானது என்று சொல்லித்திரிந்தவர் சிவனை வணங்கும் பெண் குற்றமில்லாதவள் புனிதவதி இது தெரியாதா உனக்கு" என்று கேட்டாள் காயத்திரி.

**தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை**
**ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ**
**ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்**
**வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10**

"சிவன் அகண்ட வாஸ்து. ஆயினும் அவன் சிவனடியார்களின் உள்ளத்தில் ஆனந்த சொரூபமாகத் திகழ்கின்றான். எனினும் அவன் பண்பட்ட இந்திரியங்களுக்கும் எட்டாதவன் எனப்படுகிறான். இது உண்மையா…?" என்று கேட்டாள் அருளினி.

"உண்மைதான் அவன் தான் படைத்த ஒவ்வொரு உயிரிலும் உள்ளான். தன்னை நேசிப்போரது உள்ளத்தில் மகிழ்வுடன் இருக்கிறான். அவன் படைக்காத உயிர் எதுவும் இல்லை. அதனால் அவன் அவ்வுயிர்களுக்கெல்லாம் தாயாகவும், தந்தையாகவும் விளங்குகிறான். கதிரேசன் ஐயா பெரும் சிவபக்தர். உயிர்கள் அனைத்திலும் அன்பு கொண்டவர். அதனால் அவரை ஒரு கேள்வி கேட்டுப் பார்ப்போம்; "உங்களுக்கு எட்டுப் பிள்ளைகள். அதிக அன்புள்ள பிள்ளை எது…?" கதிரேசன் சிரித்தார். தாயும் தந்தையும் பிள்ளைகளில் வேறுபாடு காட்டாது வாழவேண்டும். பாம்பின் தாயும் தந்தையும் சிவன். அதுபோல மனிதர்களது தாயும் தந்தையும் சிவன். அவன் தன்னை நேசிப்பவரையும் நேசிப்பான். நேசிக்காதவரையும் நேசிப்பான். எனக்கு எனது பிள்ளை அல்ல, எல்லோரும் எனது பிள்ளைகளே" என்றார் கதிரேசன்.

"ஒரு சிவபக்தர் இவ்வாறு கூறும்போது தந்தையான சிவன் எப்படிப் பாகுபாடு காட்டுவான். ஒருவருக்கு அநியாயம் நடந்தால் மற்றவர்களுக்குத் தெரியாது வெளிப்பட்டு உதவுவானே தவிர நேரடியாகத் தன்னைக் காண்பிக்கமாட்டான். ஏனென்றால் பண்பட்ட இந்திரியங்களுக்கும் ஆசை இருக்கும். உயிர் பிரியும் வரை ஒருவனின் செயல்களைத் தீர்மானிக்க முடியாது. அதனால்தான் சிவன் பண்பட்ட இந்திரியங்களை உடையவர்களுக்கும் எட்டாதவனாக இருக்கிறான்" என்றாள் கார்த்திகா.

**நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து**

**கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ**

**கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்**

**தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.** 11

“கார்த்திகா, முழு எலும்புக்கூட்டைச் சிவன் சுமப்பதேன்” என்று கேட்டாள் ஈஸ்வரி.

“ஈஸ்வரி, சித்தத்தைச் சிவன்பால் வைத்து, உடலைச் சவம் எனக்கருதி அதைப் போகத்திற்குப் புறம்பாக்குதல் வேண்டும். அப்பொழுதுதான் தவம் இனிது நிறைவுபெறும். பற்றுக்கள் எதுவும் இல்லாத சிவன் எலும்புகளை நரம்பில் கோர்த்து அணிந்திருப்பதன் மூலம் இக்கோட்பாட்டை விளக்குகிறார். பிரமாவும் விட்டுணுவும் ஜீவபோதம் எய்தும்போது அவர்கள் காயத்திற்கு இரையாகி மூலப்பிரகிருதியில் ஒடுங்குகின்றனர் என்னும் கோட்பாட்டைச் சிவன் சுமக்கும் முழு எலும்புக்கூடு காட்டித் தருகிறது. ஜீவபோதம் யாருக்கும் உதவாது என்பதைச் சிவனாரின் இத்திருக்கோலம் வலியுறுத்துகிறது. தவம் செய்பவர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்து உடலைச் சவமாக்கி அதைப் போகத்துக்குப் புறம்பாக்குதல் வேண்டும். இது ஒரு தொழிலைச் செய்பவனுக்கும் பொருந்தும். உடல் சவமாவது என்பது அதில் எந்தவித உணர்வுகளும் இல்லாது போதலாகும். ஒரு பொறியிலாளர் வேலை செய்யும்போது தனது உடலைச் சவமாக்குவது என்பது அவர் செயலாற்றும்போது கையாளப்படும் பொருட்கள் மீதோ, தொழிலைச் செய்யும் தொழிலாளர் மீதோ பற்று வைத்தலாகாது என்பதைக் குறிக்கிறது. அந்நிலை தான் தவநிலை. இதை விளக்கத்தான் சிவன் முழு எலும்புக்கூட்டைச் சுமக்கிறார். இதற்கு, பிரமா விட்டுணுகூட விதிவிலக்கல்ல. அதனால் தான் அவர்கள் தவம் செய்தாலும் இன்பங்களில் ஆசைப்பட்டு மூலப்பிரகிருதியில் சேர்கின்றனர். இதைத்தான் நீரோட்டத் தத்துவம் விளக்குகிறது. அதனால் தான் சிவன் பக்குவப்பட்ட இந்திரியங்களை உடையவர்களுக்கு எட்டுவதில்லை” என்றாள் கார்த்திகா.

**கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி**

**ஆனா லவனுக்கிங் காட்படுவார் ஆரேடி?**

**ஆனாலும் கேளாய் அயனுந் திருமாலும்**

**வானாடர் கோவும் வழியடியார் சாழலோ** 12

“சிவன் ஏன் புலித்தோலை அணிந்துள்ளான். ஏன் மண்டைஓட்டை உண்கலமாகக் கொண்டான். எல்லாவற்றையும் கொடுக்கும் சிவனுக்கு ஏன் இந்த நிலை” என்று கேட்டாள் ஈஸ்வரி.

“ஈஸ்வரி, பூமியில் உள்ள எவற்றையும் சொந்தம் பாராட்டக்கூடாது என்பதற்காகத்தான் சிவன் புலித்தோலை உடையாக அணிந்துள்ளான். கபாலத்தை உண்கலமாக வைத்திருக்கிறான். சுடுகாட்டைத் தன் குடியிருப்பாகக் கொண்டிருக்கிறான். எனினும் சிவன் அண்டங்கள் முழுவதிலும் பரந்துள்ளவன். அதன் சொந்தக்காரன். அதனால் தான் அனைவரும் அவனுக்குப் பரம்பரையாக அடிமையாக உள்ளனர். நடராசா தனது சிறிய தந்தை விவசாயம் செய்த கோவில் நிலத்தை அடாத்தாகப் பறித்துத்தான் விவசாயம் செய்தான். சில நாட்களில் அவன் இறக்கச் சிறிய தந்தை அந்த நிலத்தைக் கவரப்போக இன்னொரு சகோதாரனின் மகன் அது தனது உரிமையென்று வாதாட வாய்த்தர்க்கம் சண்டையாக மாற அது கொலையில் முடிந்தது. மாலதி கஜேந்திரனை விரும்பியவள். அவளது மாமன் மகள் அவள் தனக்குரியவளென அவளைப் பலாத்காரமாக அழைத்துச் செல்ல அவள் தற்கொலை செய்து கொண்டாள். எதுவும் யாருக்கும் சொந்தமாகாது. எல்லாம் சிவனது சொத்து. இதை உணரவேண்டும் என்பதற்காகத்தான் முழு எலும்புக்கூட்டைச் சிவன் சுமக்கிறான். எலும்பாக மாறி மண்ணோடு மண்ணாவது தான் மனிதனது நிலை என்பதைப் புரியவைக்கவே இதைச் சிவன் செய்கிறான். இதை யார் புரிகிறார்கள். பிரமா விட்டுணுவாலேயே புரிய முடியாத தத்துவம் இது” என்றாள் கார்த்திகா.

**மலையரையன் பொற்பாவை வாள்நுதலான் பெண்திருவை**
**உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ உலகறியத்**
**தீவேளே தொழிந்தனனேல் உலகளைத்துங் கலைநவின்ற**
**பொருள்கயெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. 13**

“கார்த்திகா, உமாதேவியார் தென்முனையில் தவமிருந்து சிவனை மணந்து கொண்டாளாம். சிவனை மணக்கத் தவம் செய்ய வேண்டுமா?” என்று கேட்டாள் ஈஸ்வரி.

“இங்குள்ளோர் உள்ளர்த்தம் தெரியாது தான் சைவவசமயத்தைப் பின்பற்று-கின்றனர். பொதுவாகத் திருமுறைகளை ஓதுபவர்கள் பொருள் தெரியாது ஓதுகின்றனர். தாம் பெரும் கல்விமான்கள் என்று சொல்வோர் புகழுக்காகவும், பணத்திற்காகவும் பேசி

வருகின்றனர். இதை உணராத மக்கள் அவர்களைப் புகழ்கின்றனர், கௌரவிக்கின்றனர். இது சடசக்தி சித்சக்தியாகப் பரிணமிப்பதன் உருவாக்கமாகும். சடமாகவும், சேதனமாகவும் இருப்பது சிவசக்தி. உலகம் அனைத்தும் சிவசக்தியின் வியாபகமாகும். சக்திக்குச் சிவன் ஆதாரமாகாவிட்டால், இயற்கையின் சமநிலை மாறிவிடும். சென்றவாரம் கோவிலில் பிரசங்கம் செய்தவர் மனைவியை விவாகரத்துச் செய்தவர். பெண் இல்லாவிட்டால் ஆணும், ஆணில்லாவிட்டால் பெண்ணும் பூரணத்துவம் அடையமாட்டார்கள். சடசக்தியைச் சித்சக்தியாக்குவது இந்த உறவு. இதை விளக்கத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் இவ்வாறு கூறுகிறார். சக்திக்குச் சிவன் ஆதாரமாகாவிட்டால் இயற்கையின் ஒழுங்குப்பாடு மாறிவிடும். இப்போ அந்தப் பேச்சாளர் வேறு பெண்களின் தொடர்பில் இருக்கிறார். இதனால் எவ்வளவு பிரச்சினைகள், துன்பங்கள், சீர்கேடுகள் வந்திருக்கின்றன. இவற்றை பேச்சை ஒழுங்குபண்ணுவோர் உணருதல் வேண்டும். பேசும்போது ஒழுக்கம், கட்டுப்பாடு என்றுவிட்டுப் பேசி முடிந்த பின்பு தாமே அதைச் செய்வதைத் தவிர்க்க வேண்டும்" என்றாள் கார்த்திகா.

"உண்மை" என்றார் கதிரேசன்.

**தேன்புக்க தண்பனைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்**

**தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ?**

**தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்**

**ஊன்புக்க வேற்காளழின் கூட்டாங்காண் சாழலோ. 14**

"சிவபெருமான் திருத்தாண்டவம் ஆடுகிறார். கடவுள் அப்படியாடலாமா....?" என்று கேட்டாள் அருளினி.

"சிவபெருமான் செய்வதெல்லாம் மக்களின் நன்மைக்காக. அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் வாழ்க்கையின் தத்துவங்களை விளக்கத்தான் சிவனால் நடத்தப்பட்டன. உதாரணமாக இரக்கம். ஓர் உயிர் துன்பப்படும்போது அதைப் பார்க்கின்ற உயிர்கள் இரக்கப்பட வேண்டும். அதில் உயர்வு, தாழ்வு, சாதி முதலியன பார்க்கக் கூடாது. அதற்காகத்தான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுக்கப்பட்டது. எந்த அறிவாளியானாலும் ஆவணம் கொண்டால் அழிவது நிட்சயம் என்பது பல திருவிளையாடல்கள் கூறுகின்றன. சிவத்தாண்டவம் சிவசைத்தன்யம் அனைத்திலும் ஊடுருவிக் கலந்துள்ளது. அது இல்லாவிட்டால் பிரபஞ்சம் சூனியமாகிவிடும். நாதத்தால் ஆனது உலகம். இயற்கையில் ஒவ்வொன்றும் நாதம் இசைக்கின்றன, அசைகின்றன.

அசைத்தல் தான் முதல் நடனம். பிள்ளை ஒன்று ஒரு வயதில் இசைக்கேற்ப ஆட முயற்சிக்கிறது. உயிர்கள் வெளியிடும் சத்தம் நாதமாகும். உதாரணமாகக் குயிலைச் சொல்லலாம். இவ்வாறு நாதத்திற்கு வேறாகவும், நடனத்திற்கு வேறாகவும் உலகம் இல்லை. ஒரு காதலன் தனது காதலியின் நடையை ரசிக்கிறான். அது அவனுக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. குழந்தையின் மழலையைக் கேட்பவர்கள் மெய்மறந்து ரசிக்கின்றனர். இசையும் நடனமும் இல்லாவிட்டால் உலகம் சூனியமாகிவிடும். இதைத்தான் சிவத்தாண்டவம் உணர்த்துகிறது" என்று கார்த்திகா சொல்ல, "அருமை, மிக அருமை" என்றார் கதிரேசன்.

**கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே**

**இடம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ**

**தடமதில்கள் அவை மூன்றுந் தழலெரித்த அந்நாளில்**

**இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15**

"கார்த்திகா சங்கரனும், நாராயணனும் ஒருவர் என்றால் பக்தரிடையே ஏன் குழப்பம் ஏற்படுகிறது" என்று கேட்டாள் ஈஸ்வரி.

"இதற்கு நான் முன்பே பதில் சொல்லிவிட்டேன். முன்பு வாழ்ந்த ஞானிகள், ரிஷிகள், கல்வியாளர்கள் ஒரு பாடலின் மெய்ப்பொருளை எது என்று வாதிட்டுத் தெளிந்தனர். அந்தத் தெளிவு மக்களுக்கு உண்டாக்கப்பட்டது. அதை உண்டாக்க வேண்டுமென்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் கூறுகிறார். "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார் செல்வர் சிவபுரத்தினுள்ளார்" என்று சொல்வதன் மூலம் பொருள் தெரியாது திருமுறைகளை ஓதுவதால் பயனில்லை என்று சொல்கிறார். இதை யார் கேட்கிறார்கள். இதை மக்களுக்கு யார் சொல்கிறார்கள். பணத்தைச் சேர்த்துக் கோவில்களைக் கட்டித் தாம் புகழையும், பணத்தையும் சேகரிக்கிறார்கள். சத்வம், ராஜசம், தாமசம் ஆகிய முப்புரங்கள் நிலைபெற்றிருக்கும் வரை உயிர்கள் அனைத்தும் ஈசனின் வாகனங்களாகும். திரிகுணாதீதத்தில் மெய்பொருள் ஒன்றுதான் மிச்சம். அதைச் சங்கரன் என்றும் சொல்லலாம். அதீதத்தில் சங்கரனும் நாராயணனும் ஒருவர் என்ற கோட்பாடு உண்டு. அதனால் சங்கரநாராயணன் என்ற பெயர் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பிரசங்கங்களில் கூறாது. பெரியபுராணக் கதைகளைக் கூறுகின்றனர். பெரியபுராணக் கதைகளினூடாக இவற்றைச் சொல்லலாம். அதற்கான அறிவை நூல்கள் மூலம் தேடிக்கொள்ள வேண்டும்" என்றாள் கார்த்திகா.

**நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை**

**அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ**

**அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்**

**கொன்றான்காண் புரமூன்றூங் கூட்டோ டே சாழலோ. 16**

“கார்த்திகா, நடராசர் பிரபஞ்சத்தில் வியாபித்திருந்து உலக நடைமுறையை விளக்குவது எப்படி?” ஈஸ்வரி கேட்டாள்.

“ஆலமரம் பிரபஞ்சத்தின் அடையாளச் சின்னம். அதனால்தான் கல்லாலமரத்தின் கீழிருந்து நடராசப் பெருமான் உலக நடைமுறையை விளக்குகிறார். எத்தனையோ முனிவர்களுக்கு அதை விளக்க மாணிக்கவாசக சுவாமிகள் அதைச் சாதாரண மக்களுக்கு இலகுமொழியின் தேனைக் கொடுப்பதுபோலத் திருவாசகத்தை அருளினார். அது அறத்தை விளக்குகிறது. அதை உணர்ந்து கற்றல் வேண்டும். திருவாசகத்தை முற்றோதல் செய்கிறார்கள். அதைச் செய்யும்போது அதன் மெய்ப்பொருளை விளங்க வேண்டும். அப்படி விளங்கினால்தான் பயன் உண்டாகும். திருவாசகம் என்பது ஓர் ஆறு. அது தேனாகப் பாய்கிறது. அதன் சுவையை உணரப் பொருள் தெரிய வேண்டும். பொருள் தெரியாது பாடுவது ஒப்பாரி வைப்பதற்குச் சமமாகும். ஆன்ம ஈடேற்றத்தை அடைய விரும்புபவர்களுக்குப் பொருள் தெரிந்தோர் அதைக்கூற வேண்டும். ஆலமரத்தின் கீழ் இருந்து அறம் உரைத்ததென்பது இதைத்தான். வேதங்களினதும், உபநிடதங்களினதும், தத்துவங்களினதும் பொருளை உரைத்தால் அதைத் தெரிந்து கொண்ட மாணவர்கள் அதைப் பாடல்களாக எழுதினர். அதைப் பாடுவதால் பயனில்லை. பொருள் தெரிந்து பின்பற்றுதல் வேண்டும். அதுதான் அறம், முப்புரம் எரித்ததென்பது பிரபஞ்சத்தின் ஒடுக்கமாகும். பின் அதீதத்தில் உள்ள சிதம்பர ரகசியம் என்பது நிர்க்குணப் பிரமமாகும்” என்றாள் கார்த்திகா.

**அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதரியும்**

**நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ?**

**நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியோ**

**எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ. 17**

“கார்த்திகா, அம்பலத்தில் சிவன் கூத்தாடுகிறான். பின் உண்பதற்காகப் பிச்சை எடுக்கிறான். இது ஏன்…? என்று கேட்டாள் ஈஸ்வரி.

“அண்டங்கள் அனைத்திற்கும் சிவன்தான் ஈசன். அவற்றை ஒழுங்கமைப்பது அவனது கூத்து. இதற்கிடையே ‘தனது’ என்று உரிமை பாராட்டாதது அவனது மகிமை. மக்களும் அவனைப் போன்று வாழவேண்டும் என்பது அதன் கோட்பாடு. தனக்குத் தனக்கு என்று தேடியவர்களை அவர்கள் தேடும் பொருட்களுக்காகத் துன்புறுத்தும் பிள்ளைகள் பலர் இருக்கிறார்கள். ஒன்றும் தேடாதவனை நேசிக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். ஓடி ஆடி வலிந்து உழைக்க வேண்டும். அதைத் தர்ம காரியங்களுக்குச் செலவிட வேண்டும். பறவைகள், மிருகங்கள், பூச்சி, புழுக்கள் விதைக்கின்றனவா, அறுவடை செய்கின்றனவா, அவைக்கென ஆயிரக்கணக்கான மரங்கள் காடாக வளர்ந்துள்ளன. விடிந்ததும் அவை உணவு தேடுகின்றன. நாளைக்கென அவை சேமிப்பதில்லை. அவற்றின் வாழ்வு மகிழ்வுடன் கழிகிறது. மனிதன் ஆசைப்பட்டு அது அவாவாக மாறி உழைத்து உழைத்து எதைக் கண்டான். உழைத்த பணம்கூட அவனுக்கு உதவாது. இவ்வூரில் வாழ்ந்த நாகராசா கோடிக்கணக்கில் பணம் சேர்த்ததார் ஐம்பது வயதில் பாரீசவாதநோய் வந்தது. வாழ்க்கையில் என்ன பயனைக் கண்டார். சுந்தரலிங்கம் உழைத்த பணத்தை அறச் செயல்களுக்குச் செலவு செய்தவன். அவன் இறந்து ஐம்பது வருடங்கள் கழிந்தபோதும் அவன் கட்டிய நூலகம், கோவில், பாடசாலை என்பன நிமிர்ந்து நிற்கின்றன. அதனால் அவன் போற்றப்படுகிறான். புகழப்படுகிறான். நாகராசா தேடுவாரில்லாமல் மரணமானார். ஐந்து வருடங்கள் கூடக் கழியவில்லை. அவரை எல்லோரும் மறந்து விட்டனர். இதுதான் உலகம். இதைத்தான் சிவன் விரும்பகிறார். அது தான் அவரது நடனத்தினதும், பிச்சை ஏற்பதினதும் தத்துவம்” என்றாள் கார்த்திகா.

**சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி**

**நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ?**

**நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தானடிக்கீழ்**

**அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18**

“கார்த்திகா, சலந்தரன் என்ற கொடிய அரக்கனைச் சிவன் தனது சக்கராயுதத்தால் அழித்தார். அதில் விருப்பங்கொண்ட நாராயணன் தனது கண்களைப் பிடுங்கிச் சிவனது பாதத்தில் புஸ்பமாக வைத்துச் சக்கராயுதத்தைப் பெற்றாராம். அது சரியா” என்று கேட்டாள் ஈஸ்வரி.

“எது சரி எது பிழை என்று தீர்மானிப்பது அவரவரது மனம். சிறந்த ஒரு பொருளைப் பெற விரும்புபவன் தனது கண்களை ஒத்த பொருளைக் கொடுத்தாவது அதைப் பெற வேண்டும் என்ற தத்துவம் இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. அபிராமி ஆதவனைக் காதலித்தாள். ஆனால் ஆதவனின் தந்தை தனக்கு ஐந்து இலட்சம் ரூபா தந்தால்தான் சம்மதிப்பேன் என்றார்; ஆதவன் பெரும் உத்தியோகத்தன். அவனை மாப்பிளையாக எடுக்கப் பலர் முயன்றனர். அதனால் ஆதவனின் தகப்பனுடன் பேரம் பேசினர். அபிராமி பேரழகி. கண்டவர்கள் இன்னொருமுறை காணமாட்டோமா என்று எண்ணும் அளவுக்கு அவள் பேரழகி. அவளைப் பார்த்துக் கொண்டிருந்தால் பசியே வராது எண்டு ஆதவன் கூறுவான். அந்தளவில் அவன் அவள்மீது காதல் கொண்டிருந்தான். அபிராமி மிகவும் ஏழை. அவளால் ஐயாயிரம் ரூபாவைக்கூடத் தேட முடியாது. அதனால் ஆதவன் அபிராமியின் தந்தையான மகேசனைச் சந்தித்து பத்து இலட்சம் ரூபாவைக் கொடுத்து; “முன்பு எனது தந்தை எனது பெறுமதி ஐந்து இலட்சம் என்றவர். இப்போது ஊரவர் சிலர் பெறுமதியை ஏழு இலட்சமாக உயர்த்தி விட்டனர். அதனால் எனது தந்தையைச் சந்தித்துப் பத்து இலட்சம் ரூபாவையும் கொடுங்கள். யார் தந்ததென்றால் சிவன் தந்தது என்று சொல்லுங்கள். அதை அவர் நம்புவார்” என்றான். மகேசன் எதுவும் பேசாது பணத்தைப் பெற்றுக்கொண்டு ஆதவனுக்கு அபிராமியைத் திருமணம் செய்து வைத்தார். ஒரு செயல் சிறிதாவதும், பெரிதாவதும், அத்தியாவசியமாவதும் அவரவர் மனத்தைப் பொறுத்தது. அதைத்தான் அக்கதை விளக்குகிறது.” என்றாள் கார்த்திகா.

**அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்**
**எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ**
**எம்பெருமான ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்**
**தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19**

“கார்த்திகா, சிவனின் அருள் உன்னிடமுள்ளதால் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்கிறாய். சிவன்தான் பிரபஞ்சம். அதனால் அனைத்தும் அவனின் மயமாக இருக்கிறது. அதனால் எல்லாம் அவனது ஆடையாக அமைகிறது. பாம்பின் பல்லில் நஞ்சு இருப்பதுபோன்று பிரபஞ்சத்தில் உள்ள நன்மையும், தீமையும் அவனின் திருவிளையாட்டு. அதனால் விசம் அவனுக்கு அமிர்தமாகும். அவனது மகிமைகள்

அவன் அறிவதில்லை. அறிந்தும் கொள்வதில்லை. அதனால் மற்றவர்கள் எப்படி அறிவார்கள்" என்றாள் ஈஸ்வரி.

"ஈஸ்வரி அவன் அறியாவிட்டாலும் எமக்கு அறிவிக்கிறான். அவனது குணங்குறிகள் யாவும் எல்லோருக்கும் தெரியும். அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும், படித்தோ அல்லது கேட்டோ அறிந்தவர்கள் அதற்கேற்றபடி வாழவேண்டியது தானே. ஆணவத்தால் தலை, கால் புரியாமல் நடக்கக்கூடாது. அன்புடன் அவனைத் தொழுதால் அடியவர்க்கு வரும் துன்பங்களை நீக்குவான் என்பதைப் பாணபத்திரனது அன்பையும் ஏமநாதனது ஆணவத்தையும் வைத்துச் சிவன் விளையாடியமை உனக்குத் தெரியும். உமையம்மைகூடச் சிலசமயம் சிவனை மதிக்காததால் துன்பப்பட்டதும் தெரியும். இதிலிருந்து பலவற்றையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் சொல்ல முடியாது. பன்றிக்குட்டிகளுக்கு உதவியதைப்போலப் பாணபத்திரனுக்கும் உதவியவன். சலந்திரனை அழித்ததுபோல ஏமநாதனைக் கலைத்தவன். இதிலிருந்து நாம் எல்லாவற்றையும் உய்த்துணர வேண்டும். நீ காதலிப்பதால் காதலில் வெற்றிபெற வேண்டும் என்று வணங்கு. கல்யாணிக்குப் பிள்ளை இல்லை. அவள் பிள்ளை வேண்டுமென்று வணங்கட்டும். இதை வீட்டுக்குவீடு சென்று விசாரித்துச் சொல்ல முடியுமா என்ன...?" என்று கேட்டாள் கார்த்திகா.

**அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்**

**இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ?**

**அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்**

**திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண சாழலோ. 20**

"பிரபஞ்சமாக இருக்கும் சிவபெருமான் இடையறாது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருட்களையும் விளக்கிக் கொண்டே இருக்கிறார். அதுபற்றிச் சொல்லடி" என்றாள் அருளினி.

"ஆலமரம் இயற்கையின் சின்னம் எனப்படுகிறது. இறைவன் அதன்கீழ் இருந்து உபதேசிப்பதால் இயற்கையும், இறைவனும் ஒன்றென்ற தத்துவம் புரிய வைக்கப்படுகிறது. இந்த வடிவத்தை அர்த்தநாரீசுவர வடிவம் என்று ஞானிகள் கூறுவார்கள். தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கு புருசாத்தங்களையும் இவ்வடிவம் எடுத்தியம்புகிறது. இவை ஒவ்வொருவரது அறிவுக்கேற்றபடி விளங்கிக் கொள்ளப்படுகிறது. வாழ்க்கையின் நோக்கம் முத்தியடைதலாகும். இதனால்தான் பல சிவதர்மங்கள் சிவனால் உருவாக்கப்பட்டுள்ளன. ஒழுக்கமான வாழ்வு, தன்னால்

இயன்றதைத் தருமம் செய்தல், மனைவியுடன் இன்பமாக உறவாடி நன்மக்களைப் பெறுதல். அவர்களைச் சமூகத்திற்கு உதவுபவர்களாக வளர்த்தல். அதன்பின் முத்தியடைவதற்கான வழியைக் கைக்கொள்ளல். அவனது திருவிளையாடல்கள் மூலம் மக்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருசாத்தங்களையும் விளக்குகிறான். சிவனும் உமையும் கலந்த உருவம் அர்த்தநாரீசுவர உருவமாகும். பெண் குடும்பத்தில் சரி பாதியானவள். ஆணுக்குள்ள உரிமைகள் யாவும் பெண்ணுக்கும் உண்டு. ஒரு வகையில் அவள் விளைநிலமாக இருந்து உலகிற்கு தேவையான அறிஞர்களை உருவாக்குகிறாள். தர்மம் செய்வது பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. தர்மம் செய்வதன் மூலம் செய்பவனின் பரம்பரையே நன்மை பெறுகிறது. இதைப் புராண இதிகாசங்களும், அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் விபரமாகச் சொல்கின்றன. அறப்படி பொருளைத் தேடவேண்டும். அதன்மூலம் அறச் செயல்களைச் செய்தல் வேண்டும். அறப்படி வாழ வேண்டும். வாழ்க்கையில் காமம் முக்கியமானது. காமத்தை ஞானமாகக் கொள்ளுதல் சைவசமயத்தின் விதி. அதையும் அறப்படி செய்தல் வேண்டும். இவற்றை ஒழுக்கமான முறையில் கடைப்பிடித்தால் மோட்சம் தேடிவரும். இதைத்தான் அர்த்தநாரீசுவரத் தோற்றம் விளக்குகிறது என்கிறார் மாணிக்கவாசகர்" என்றாள் கார்த்திகா.

"மிக நிதானமாக ஆர்வத்துடன் திருவாசகத்தைக் கற்றுள்ளாய். சிவன் உனக்கு மேலான வாழ்வைத் தருவான்" என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.